# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2021.10.12 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்)

**1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

தொழில் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** *: 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3 பிரிவைத் திருத்துகின்றதென்பதுடன், அது வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் விளைவாந்தன்மையானதாகும்.*

வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல்
(சிறப்பேற்பாடுகள்) (திருத்தம்)

*ச.வ.- ஓ. 31/2021*

## *1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

சுருக்கப் பெயர்

**2**. ஆயிரத்துத்தொளாயிரத்து எழுபத்தோராம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் வேலையை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவில், (இ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

*1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்*

"(இ) எவரேனும் வேலையாளின் வேலையை முடிவுறுத்தலானது 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, வேலையாளர்களின் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதுச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய வேலையாள் குறைந்தபட்ச ஓய்வுபெறும் வயதை அடைகின்றதன்மேல் பயனுறுத்தப்பட்டவிடத்து அவரின் வேலையை முடிவுறுத்துவதற்கு;".

**3**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்